பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*21 06 2026 SUNDAY 12 40 PM*

ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மனநலத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் யோகா வழிகாட்டுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்திய கடற்படையின் INS Dunagiri, INS Sanshodak, INS Agray ஆகிய போர்க்கப்பல்கள் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டன.

3. இன்று நடைபெறவுள்ள நீட் மறுதேர்வை 22 லட்சத்து 29 ஆயிரம் பேர் எழுதவுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

4. ரஷ்ய சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த 24 பேர் தாயகம் திரும்பினர்.

5. ஆசிய கராத்தே மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியாவின் Alisha Choudhary தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

மனநலத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் யோகா வழிகாட்டுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, கொல்கத்தாவில் நடைபெற்ற யோகாசன நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், யோகா வெறும்

உடற்பயிற்சியாக மட்டுமின்றி, மனநலத்திற்கும், உள்ளுணர்வை வெளிப்படுத்துவதற்கும் உதவிகரமாக உள்ளதாக கூறினார்.

ஆரோக்கியமான முதுமைக்கு யோகா என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும் என்று அவர் தெரிவித்தார்.

யோகாவை பின்பற்றுவதன் மூலம், 40 வயதில் 20 வயது இளைஞர் போலவும், 50 வயதில் 30 வயதுடையவர் போலவும், 70 வயதில் 50 வயதுடையவர் போலவும் செயல்பட முடியும் என்று அவர் கூறினார்.

சர்வதேச யோகா தினம், உலகெங்கும் உள்ள பல்வேறு நாடுகளில் கொண்டாடப்படும் சமூக நிகழ்வாக உருவெடுத்துள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

யோகா 365 என்ற 100 நாள் இணையதள யோகா பயிற்சி வகுப்பில் 130 நாடுகளைச் சேர்ந்த 30 லட்சம் பேர் கலந்து கொண்டதாக அவர் கூறினார்.

ஆரோக்கியமான சமூகத்தால் மட்டுமே நாடு வளர்ச்சியடைய முடியும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>><<<<<

யோகா என்பது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் உருவான உடல், மன, ஆன்மிக நலனுக்கான பயிற்சி என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, அவர் எழுதியுள்ள கட்டுரையில், இளம் வயதிலேயே யோகாசனப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அனைத்து குடிமக்களும், கல்வி நிறுவனங்களும், மருத்துவ அலுவலர்களும், சமூக அமைப்புகளும் யோகாசன முறையை பின்பற்றி பயனடைய வேண்டும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அந்த கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தலைமையில், புதுதில்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் யோகாசன நிகழ்ச்சி நடைபெற்றது.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், யோகாவின் மூலம் நேர்மறையான எண்ணங்களை உருவாக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்காக ஒவ்வொரு குடிமகனும் பங்காற்றுவதற்கு யோகா ஊக்கசக்தியாக விளங்குவதாக திரு. ஓம் பிர்லா குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் மகாபலிபுரத்தில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொண்டார்.

முன்னதாக, இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், உடல், மனம், உணர்வு ஆகியவற்றை வலுப்படுத்தும் பயிற்சி முறையாக யோகா அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்..

சுகாதாரமான முழுமையான வாழ்விற்கு உதவிடும் பயிற்சி முறையாக யோகா திகழ்கிறது என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்

சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, வேலூர் கோட்டை பூங்காவில் மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

யோகாசனம் மூலம் மனவலிமை ஏற்பட்டுள்ளதாக யோகாசன பயிற்சியை மேற்கொண்டவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – பயிற்சியாளர்கள் 35 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தெற்கு ரயில்வே சார்பில் சர்வதேச யோகா தினம் சென்னையில் இன்று கொண்டாடப்பட்டது.

தெற்கு ரயில்வேயின் கூடுதல் பொதுமேலாளர் திரு. Vipin Kumar தலைமையில் நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற யோகாசன நிகழ்ச்சியில் ஏராளமான ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

தெற்கு ரயில்வேயின் சென்னை, திருச்சி, மதுரை, சேலம், பாலக்காடு, திருவனந்தபுரம் ரயில்வே கோட்டங்கள் சார்பிலும் சர்வதேச யோக தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

>>>>><<<<<

கப்பல் கட்டுமானத் துறையில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய கடற்படையின் 3 போர் கப்பல்களை இன்று நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்து பேசிய அவர், இதுதொடர்பாக, மத்திய அரசு பல்வேறு கொள்கை முடிவுகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் கடல்சார் துறை மேம்பாடு அடைவதன் மூலம், லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக வாய்ப்புள்ளதாக பிரதமர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் I N S Dunagiri, I N S Sanshodak, I N S Agray ஆகிய போர்க்கப்பல்களை இந்திய கடற்படையின் சேவைக்காக திரு. நரேந்திர மோடி இணைத்தார்.

இந்திய கடற்படையின் போர் கப்பல் வடிவமைப்பு வாரியம் அமைத்துள்ள இந்த போர் கப்பல் கொல்கத்தாவின் காடர்ன் ரீச் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

I N S Dunagiri போர் கப்பலில் பிரம்மோஸ் ஏவுகணை உள்ளிட்ட ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன.

I N S Sanshodak போர் கப்பல் கடலோர மற்றும் ஆழ்கடல் பகுதிகளில் ஆய்வுக்கு பயன்படுத்தப்படும்.

I N S Agray போர் கப்பல் நீர்மூழ்கி கப்பலை கண்டறிந்து அழிக்கும் திறன் கொண்டதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பல்களின் 75 சதவீத பாகங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இந்திய கடற்படையின் 3 போர்க்கப்பல்களை, பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தது, கடல்சார் திறன் வளர்ச்சியில் வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சுயசார்பு இந்தியா அடிப்படையில், ராணுவ தளவாடங்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப்பெருங்கடலில் கடல்சார் பாதுகாப்பிற்காக இந்த போர்க்கப்பல்கள் பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இளநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் மறு நுழைவுத் தேர்வு இன்று நடைபெறுகிறது.

இத்தேர்வை 22 லட்சத்து 29 ஆயிரம் பேர் எழுதவுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்கள் அச்சமின்றி தேர்வை எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வெளிப்படைத் தன்மையுடனும், பாதுகாப்பாகவும் நீட் தேர்வை நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் 551 நகரங்களிலும், வெளிநாடுகளில் 14 நகரங்களிலும் நடைபெறும் இந்த தேர்வு, பிற்பகல் 2 மணிக்கு தொடங்கி மாலை 5.15 மணி வரை நடைபெறவுள்ளது.

பிற்பகல் ஒன்றரை மணி வரை மட்டுமே தேர்வு மையத்திற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தேசிய தேர்வு முகமை கூறியுள்ளது.

சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், நுழைவுச்சீட்டு மற்றும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையுடன் மாணவர்கள் தேர்வெழுத அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வெழுதும் மாணவர்களுக்கான குடிநீர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக அந்த முகமை கூறியுள்ளது.

>>>>><<<<<

ரஷ்ய சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த 24 பேர் தாயகம் திரும்பினர்.

சைபீரியப் பகுதியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்ட இவர்களை, விடுவிக்க வேண்டும் என்று பிலிப்பைன்ஸ் அதிபர் Ferdinand Marcos ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினை கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து, கடந்த புதன்கிழமை இவர்களை விடுவிக்க திரு. புட்டின் உத்தரவிட்டார்.

இந்த 24 பேரும், இரண்டு விமானங்களில் இன்று காலை பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா சென்றடைந்தனர்.

>>>>><<<<<

ஆசிய கராத்தே மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியாவின் Alisha Choudhary தங்கப்பதக்கம் வென்றார்.

இந்தோனேஷியாவின் Bali-யில் நடைபெற்ற இப்போட்டியின் 55 கிலோ எடைப்பிரிவில் ஜப்பானின் Rina Kodo-வை 4-3 என்ற புள்ளிக்கணக்கில் வென்றார்.

>>>>><<<<<

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் Anvi Rathod வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் Suhl-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 10 மீட்டர் ஏர்ரைஃபில் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா 4 தங்கம், ஒரு வெள்ளி, 4 வெண்கலப்பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலில் உள்ளது.

>>>>><<<<<

உலக கோப்பை கால்பந்துப் போட்டியில், ஜெர்மனி 2-1 என்ற கோல்கணக்கில் ஐவரி கோஸ்ட் அணியை வென்றது.

இதுவரை, ஜெர்மனி, மெக்ஸிகோ, அமெரிக்கா நாடுகளின் அணிகள் நாக்அவுட் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

>>>>><<<<<

முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில், இலங்கை-ஏ அணிக்கு எதிராக பேட் செய்து வரும் இந்தியா-ஏ அணி சற்றுமுன்வரை 34 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 247 ரன் எடுத்துள்ளது.

>>>>><<<<<

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

மான்செஸ்டரில் இப்போட்டி இன்றிரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

நேஷன்ஸ் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று நியூஸிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<